செ.வெ. எண்: 49 நாள்: 19.01.2012

# தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் விருதுகள் 2011

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு சிறப்பாகப் பணியாற்றி வரும் கல்வி நிறுவனங்கள், தனி நபர், தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு 2011–ஆம் ஆண்டின் 'சுற்றுச்சூழல் விருதுகள்' வழங்கி கௌரவிப்பதற்குத் தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது.

| **விருதுகளின் விவரம்** | **தகுதியுடைய நபர்கள்** |
|---|---|
| 1) சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் கல்வி | சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் கல்வியில் சிறந்து விளங்கும் கல்வி நிறுவனங்கள் / கல்வி–யாளர்கள் / தனி நபர்கள் |
| 2) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை | அ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையில் சிறந்து விளங்கும் தனி நபர்கள்<br>ஆ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மையில் சிறந்து விளங்கும் நிறுவனங்கள் |

1) விண்ணப்பதாரர் தனிநபராக இருப்பின் 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.
2) சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் கல்வி பிரிவில் தனிநபர் மற்றும் நிறுவனங்கள் தங்களது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.
3) கடந்த மூன்று ஆண்டுகளில் தனிநபர் / நிறுவனம் செய்த பணிகள் மட்டுமே விண்ணப்பத்தில் இடம்பெற வேண்டும்.
4) தனி நபராக இருப்பின் தமிழக அரசின் வேறு எந்த விருதுகளுக்கும் அனுப்பப்படாத பணிகளின் விவரம், அவற்றின் பயன் மற்றும் விவரங்களை அறிக்கையுடன் இணைத்தல் வேண்டும்.
5) தனிநபர் எந்த நிறுவனத்திலும் பணி புரிபவராக இருத்தல் கூடாது. ஆனால் பணியிலிருந்து ஓய்வு பெற்றபின் தனிநபர் செய்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்து விண்ணப்பிக்க தகுதியுடையவர்.
6) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை பிரிவில் விண்ணப்பிக்கக்கூடிய தனிநபர்/நிறுவனம் அறிவிக்கையில் குறிப்பிட்ட கால கட்டத்தில் மேற்கொண்ட களப்பணி மற்றும் அதைச் சார்ந்த பிரசுரங்கள், பத்திரிக்கை குறிப்புகள், திட்ட அறிக்கைகள், அதனால் ஏற்பட்ட பயன்பாடு, பயனாளிகள்/பங்கு பெற்றோர் எண்ணிக்கை குறித்த தகவல்கள் இடம்பெற வேண்டும்.
7) மேற்கொண்ட களப்பணியை சம்பந்தப்பட்ட துறையின் அதிகாரிகள்/தேர்வுக் குழுவினர் தணிக்கை செய்வார்கள்.
8) சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை விருதிற்கு விண்ணப்பிக்கும் தனிநபர்/நிறுவனம், ஏதேனும் ('அ' அல்லது 'ஆ') ஒரு பிரிவில் மட்டுமே விண்ணப்பிக்கலாம்.
9) மேற்கண்ட மூன்று பிரிவிற்கும் அப்பிரிவின் எதிரே குறிப்பிட்டுள்ள தகுதியுள்ள தமிழ்நாட்டைச் சார்ந்த நபர்கள் / நிறுவனங்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
10) மேற்கண்ட மூன்று பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிற்கும் என உள்ள தனித்தனி விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.
11) ஏற்கனவே சுற்றுச்சூழல் துறையால் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்ட நபர்கள் / நிறுவனங்கள் மீண்டும் விருதுகள் பெற விண்ணப்பிக்க இயலாது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் ஆறு நகல்களில் ‘இயக்குநர், சுற்றுச்சூழல் துறை’ (Director, Department of Environment) என்ற பெயரில் ரூ.100/—க்கான கேட்புக் காசோலையுடன் மூன்று புகைப்படங்களையும் (Passport size) இணைத்து அனுப்ப வேண்டும்.

**சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கு ரொக்கப் பரிசு**

| | |
|---|---|
| சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக் கட்டுரை | சுற்றுச்சூழலின் சிறந்த மேலாண்மைக்கு வித்திடும் ஆராய்ச்சியாளர்கள் / ஆராய்ச்சி நிறுவனங்கள் |

1) சிறந்த சுற்றுச்சூழல் ஆராய்ச்சிக் கட்டுரைகளை ஊக்குவிக்கும் வண்ணம் 2011—ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் டிசம்பர் வரை வெளியான, தனிநபர் அல்லது ஒன்றிற்கு மேற்பட்டோர் இணைந்து உருவாக்கிய, சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைக்கு ரொக்கப் பரிசும், பாராட்டு மடலும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2) ஆராய்ச்சிக் கட்டுரைகள் தமிழிலும் / ஆங்கிலத்திலும் தரமான ஆராய்ச்சி ஏடுகளில் பிரசுரிக்கப்பட்டவைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.
3) ஆங்கில கட்டுரையானால் ஆராய்ச்சி கட்டுரையின் தமிழ் மொழிபெயர்ப்பு இணைக்கப்பட வேண்டும்.
4) இதற்கு ஆதாரமாக எந்த ஆராய்ச்சி/அறிவியல் ஏடுகளில் பிரசுரிக்கப்பட்டது என்ற விவரம் அளித்தல் வேண்டும்.
5) இந்த அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் பிரசுரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
6) ஆராய்ச்சி கட்டுரை பிரிவின்கீழ் சம்பந்தப்பட்ட தலைப்பில் புத்தகமாக வெளியிடப்பட்டிருப்பின் (தமிழிலும்/ஆங்கிலத்திலும்), அந்த புத்தகம் முழுமையாக இணைத்தல் வேண்டும்.
7) ஆராய்ச்சி கட்டுரை மற்றும் புத்தகம் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் சேர்ந்து பிரசுரம் செய்திருந்தால், முதல் நபர் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடையவர்.
8) ஆராய்ச்சிக் கட்டுரையின் நான்கு நகல்கள் அனுப்பப்பட வேண்டும்.

ஏற்கனவே விருது பெற்ற தனி நபர் / ஒன்றிற்கு மேற்பட்டோர் மீண்டும் விருது பெற விண்ணப்பிக்க இயலாது.

இவ்விருதுக்குரிய விண்ணப்பப் படிவங்களை, இயக்குநர், சுற்றுச்சூழல் துறை, தரை தளம், பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை—600 015 என்ற முகவரியிலிருந்து அனைத்துப் பணி நாட்களிலும் 06.01.2012 முதல் 07.02.2012 வரை காலை 10.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பத்தினை இத்துறையின் வலைதளத்திலிருந்தும் படி எடுத்துக் கொள்ளலாம்.

வலைதள முகவரி — www.environment.tn.nic.in
தொலைபேசி எண்.— 2433 6421 / நிகரி 2433 6594

| | | |
|---|---|---|
| விண்ணப்பங்கள் வழங்கும் நாள் | — | 06.01.2012 முதல் |
| விண்ணப்பங்கள் பெறுவதற்குரிய கடைசி நாள் | — | 07.02.2012 |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | — | 27.02.2012 |

**வெளியீடு: — இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**

**P.R. No. 49** **Date:19.01.2012**

## ENVIRONMENTAL AWARDS 2011

Government of Tamil Nadu has proposed to give Environmental Awards to the meritorious individual / organization from Tamil Nadu involved in the field of Environmental Education and Awareness, Environmental Protection and Management during the year 2011. The details are as follows:

| Details of Awards | Eligibility |
|---|---|
| 1) Environmental Awareness and Education | Educational Institution, individual and Educationist involved in Environmental Education and Awareness |
| 2) Environmental Protection and Management | a) Individual involved in Environmental Protection and Management activities.<br>b) Organisations and Institutions involved in Environmental Protection and Management activities. |

01) Applicant, if individual, should have completed 18 years of age.
02) Individuals / Institutions can apply for Awards under the category "Environmental Awareness and Education"
03) Activities of the past three years alone must be mentioned in the application.
04) Applicant, if individual, should enclose such of those details of the works carried out and its usefulness, which were not considered for any awards by the Government of Tamil Nadu.
05) Individual applicant should not be employed in any institution. However, retired individuals are eligible for the awareness works carried out after his retirement.
06) Individuals / institutions applying for the Award under "Environment Protection and Management" category should furnish the details of field work undertaken during the period mentioned in the announcement, related pamphlets, newspaper clippings, project reports, the usefulness of the field work undertaken, number of beneficiaries / participants.
07) Such field work shall be imspected by officials of the concerned department/ members of the selection committee.
08) Individual / Institution shall apply for only one category for awards under "Environment Protection and Management".
09) For the above categories, the eligible candidates / organizations from Tamil Nadu alone should apply.
10) Applications should be made for each category in the specific form for that category.
11) The individuals / organizations who have already received the awards from the Department of Environment are not eligible to apply.

The filled in applications should be sent in 6 copies along with a demand draft for Rs.100/- drawn in favour of 'Director, Department of Environment, Chennai-15' along with 3 passport size photographs.

| **Details of Award** | **Eligibility** |
|---|---|
| Environmental Research Paper | Researchers/Research Organizations involved in Environmental Management |

01) To encourage research in the field of Environment, best research paper published individually / jointly during January to December 2011 are proposed to be awarded with a cash prize and a citation.
02) Research papers published in reputed scientific journals in English / Tamil alone will be entertained.
03) If the research paper is in English, a tamil translation should be furnished.
04) Proof for publication in the scientific journal should be furnished.
05) Should be published during the period mentioned in this announcement.
06) If the research paper is in the form of a Book, the entire book should be enclosed.
07) If the research paper / book has been published jointly by more than one person, then the primary individual alone is eligble to apply.
08) Four copies of the research paper should be sent.
09) Those who have already received the awards from the Department of Environment are not eligible to apply.

Those who are desirous of applying for the above awards may obtain the application form from the Office of the Director, Department of Environment, Ground Floor, Panagal Building, Saidapet, Chennai-15 on all working days from 02.01.2012 to 07.02.2012 between 10.00 AM and 05.00 PM. The application form may also be downloaded from the website of the Department.

Website Address: www.environment.tn.nic.in
Telephone Nos. : 2433 6421 / FAX 2433 6594

| | | |
|---|---|---|
| Date of Issue of Application | - | 06.01.2012 onwards |
| Last date for issue of application | - | 07.02.2012 |
| Last date for submission of filled in application | - | 27.02.2012 |

**Issued By:-**

**DIPR, Secretariat, Chennai - 9.**